**தெற்காசியா துணை பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் கீழ் பணிமனை கட்டிட வளாக நிர்மாண செயற்திட்டம் - 2022**

---

தெற்காசியா துணை பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் கீழ் பணிமனை கட்டிட வளாக நிர்மாண செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3716-எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரை 2.09(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கை மற்றும் செயற்திட்ட நிர்வாக கையேடு என்பவற்றின் பிரகாரம் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது.

துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்கு வசதியளிப்பதற்காக SLPA இன் தற்போதைய பணிமனை கட்டிடம் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்பது செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளதுடன் கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் தேசிய துறைமுக பிரதான திட்டத்தை பின்பற்றி துறைமுக வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு தயார்படுத்துவதற்கு SLPA ஆதரவு அளிக்கிறது. செயற்திட்டத்தின் செயற்பாடுகள் அதாவது பணிமனை கட்டிட வளாக நிர்மாணம் சிவில் வேலை கூறுகளின் கீழ் செயற்படுத்தப்படுகின்றன.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,090.08 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 6.11 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 1,090.08 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 6.11 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2021 செப்தெம்பர் 09 இல் செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை ஆரம்பித்திருந்ததுடன் 2022 யூன் 09 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2023 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இலக்கம் | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| அ) | அரச பெறுகை வழிகாட்டியின் உப பிரிவுகள் 2.4 மற்றும் 2.6 | அரச பெறுகை வழிகாட்டுதலின் பிரகாரம் பொறியாளர் மதிப்பீடுகள், ஏல ஆவணங்கள் மற்றும் அளவீட்டுப் பத்திரங்கள் ஆகியவை பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களினால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. இதன் விளைவாக, பொறியாளர் மதிப்பீடுகளில் உள்ள முரண்பாடுகள் மற்றும் விடயங்களின் தவறான விளக்கங்கள் காரணமாக ஒப்பந்தத்தை வழங்கும் போது ரூபா 185.18 மில்லியன் ஆன நட்டமொன்று ஏற்பட்டது. மேலும், விலை உயர்விற்காக ரூபா 132.96 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இலங்கை அரசாங்கம் (GOSL) எடுத்த கொள்கை தீர்மானத்தின்படி, இறக்குமதிக்காக கடன் கடிதங்களை திறப்பது ஊக்கமளிக்கப்படவில் லை. இதன் விளைவாக, பொருட்களின் விலை படிப்படியாக உயர்ந்தன. | அரச பெறுகை வழிகாட்டியுடன் இணங்க வேண்டும். |
| ஆ) | ஒப்பந்த நிபந்தனைகளின் 4.10 ஆம் உபபிரிவு | ஒப்பந்தத்தின் நிபந்தனை 4.10 இன் பிரகாரம் , ஆழ்துளை கிணறு விசாரணை அறிக்கைகள் தொழிலதிபரால் வழங்கப்பட வேண்டும் மற்றும் ஒப்பந்ததாரர் அவற்றின் துல்லியத்தை சரிபார்ப்பதற்கு நியாயமான முயற்சிகளைப் பயன்படுத்த வேண்டியதுடன் ஒப்பந்ததாரர் மேலும் | PAEH இன் கிரிட் லைன் SLPA இற்கு தெரியாமல் PAEH ஒப்பந்தக்காரரால் மாற்றப்பட்டுள்ளது. எனவே, கட்டிடம் முழுவதையும் அளுத் மாவத்தை வீதியின் கரையை நோக்கி மாற்ற வேண்டியிருந்தது. | மேலதிக செலவைத் தவிர்ப்பதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விசாரணைகளை நடாத்த வேண்டும். எவ்வாறாயினும், மேற்படி உப பிரிவுக்கு முரணாக, ஒதுக்கப்பட்ட தொகை விடயத்தின் கீழ் சிறப்புப் பரிசோதனைக்காக ஒப்பந்ததாரருக்கு ரூபா 566,875 செலுத்தப்பட்டுள்ளது. | | |
| இ) | குறிப்பிட்ட ஒப்பந்த நிபந்தனைகளின் 8.7 ஆம் உபபிரிவு | ஒப்பந்தத்தின் குறிப்பிட்ட நிபந்தனையின் பிரிவு 8.7 இன் படி, ஒப்பந்ததாரரின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத் தொகையில் இருந்து 10 சதவீதத்திற்கு மேற்படாத தாமத இழப்பீடுகளை தொழிலதிபர் (இலங்கை துறைமுக அதிகாரசபை) வசூலிக்க வேண்டும். எவ்வாறாயினும், திட்டம் சுமார் 09 மாதங்கள் (EOT02) காலம் தாமதமாகிவிட்ட போதிலும், தாமத இழப்பீடுகள் வசூலிக்கப்படவில்லை. | FIDIC இன் துணைப்பிரிவு 2.1 இன் படி, 2023 ஏப்ரல் 25 வரை, PAEH ஒப்பந்ததாரர் அதே பகுதியை தங்கள் கட்டுமான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதால், SLPA ஆல் தள உடைமையின் பகுதியைக் கொடுக்க முடியவில்லை. எனவே, கால நீட்டிப்பு முடியும் வரை தாமத இழப்பீடுகளை வசூலிக்க வேண்டிய தேவையில்லை. | திட்டத்தின் நோக்கம் குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| **கூறு** | **செயற்பாடு** | **தாமதம் / கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|---|
| **மாதாந்த செயலாற்றல் அறிக்கை** | | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல்**<br>**அலகு/ சதவீதம்** | | |
| **மாதாந்த செயலாற்றல் அறிக்கை** | முடிக்கப்பட வேண்டிய திகதியிலிருந்து 205 நாட்கள் கடந்த பின்னரும் ஒப்பந்ததாரர்கள் முக்கிய நடவடிக்கைகளை முடிப்பதற்கு தவறியிருந்தனர். | **விடயம் / பெயர் அமைப்பு / செயலாற்றல் %**<br>1 / இயந்திர கடை / 91.45<br>2 / உருக்கு பெப்ரிகேஷன் கடை / 38.20<br>3 / பொருத்தும் கடை / 67.51<br>4 / கொல்லன் கடை / 91.81<br>5 / தற்காப்புச் சுவர் / 50<br>6 / CEB உப நிலையம் / 74.35<br>7 / தீ சம்ப் / 4.25<br>8 / மின்மாற்றி நிறுவுதல் / 13.5<br>9 / கழிவு நீர் தாங்கி / 1.25 | 2022 யூனிற்குள் செயற்திட்டத்தை முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும், (PAEH) ஒப்பந்தக்காரரால் கிரிட் லைன் மாற்றப்பட்டமை, தற்போதுள்ள தேங்காய் எண்ணெய் குழாய் லைன் கட்டிடத்தளம் முழுவதும் போடப்பட்டமை, அத்தியாவசிய உருக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்கு LC ஐ திறப்பதற்கு நாட்டில் டொலர்கள் கிடைக்காமை, பொருட்கள் மற்றும் சேவைகளின் அசாதாரண விலை உயர்வு, கோவிட் - 19 தொற்றுநோய் சூழ்நிலைகள், பாதகமான வானிலை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் தளம் ஒப்படைக்கப்பட்டதில் தாமதம் போன்ற காரணங்களால் செயற்திட்டம் தாமதமாகியது. | திட்டமிடப்பட்ட காலத்திற்குள் பௌதீக முன்னேற்றத்தை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் மற்றும் தாமதத்திற்கு ஏதேனும் சரியான காரணம் இருந்தால், அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அங்கீகாரத்துடன் ஆவணப்படுத்தப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்திற்கான நிதியை உரிய காலத்திற்குள் பயன்படுத்தத் தவறியதன் காரணமாக மீளாய்வாண்டில் கடனுக்காக வழங்கப்படாத வருவாயிற்காக கடனளிப்பு முகவர் நிறுவனத்திற்கு ரூபா 2.544 மில்லியன் கடப்பாட்டுக் | இந்த கடன் வசதி இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA) மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை (RDA) ஆகிய இரண்டிற்கும் வழங்கப்பட்டுள்ளது. RDA ஆனது 2019 ஆம் ஆண்டில் | செயற்திட்டத்திற்கான தேவையற்ற செலவைக் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் திரட்டப்பட்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் ரூபா 7.303 மில்லியன ஆக இருந்தது. | கடன் வழங்கலைத் தொடங்கியிருந்ததுடன் இதன் மூலம் கடனுக்கான முழு நிலுவைத் தொகைக்கான கடப்பாட்டுக கட்டணங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.<br><br>எனவே, 2022 ஆம் ஆண்டில் SLPA பகுதிக்கான சுட்டிக்காட்டப்பட்ட கடப்பாட்டுக் கட்டணமான ரூபா 2.544 மில்லியன் மேலதிக கட்டணமொன்று அல்ல, மாறாக ஏற்கனவே கணக்கிடப்பட்டு மொத்தக் கடன் தொகையில் சேர்க்கப்பட்டுள்ள கட்டாயக் கட்டணமாகும். | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான ஒவ்வொரு விடயத்திற்கும் பொறுப்புக்களை நிர்ணயிப்பதன் மூலம் நடவடிக்கைகள், இலக்கு காலப்பகுதி, பௌதீக மற்றும் நிதி இலக்குகள் ஆகியவற்றைக் குறிப்பிடும் விரிவான செயல்நடவடிக்கைத் திட்டம் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுவாக, அனைத்து செயற்திட்டங்களையும் உள்ளடக்கிய ஒரு பொதுவான செயல்நடவடிக்கைத் திட்டம் சம்பந்தப்பட்ட செயற்திட்டப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இது தவிர, செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் , பொது திறைசேரியால் வழங்கப்பட்ட மாதிரியின் அடிப்படையில் செயற்திட்டத்தின் ஒவ்வொரு முக்கிய உருப்படிகளையும் உள்ளடக்கிய தனியான மாதாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்கான இலக்குகள் மற்றும் சாதனைகளை அளவிடுவதற்கான ஒரு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்ட காலம் 2023 மார்ச் 31 அன்று முடிவடைந்த போதிலும், 3 ஆவது கால நீட்டிப்புக்கான (EOT-03) அங்கீகாரம் 2023 மே 31 வரை பெறப்பட்டிருக்கவில்லை. | பொருத்துதல் கடைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை பணிமனை ஒப்பந்ததாரரிடம் 2023 சனவரியில் RDA ஒப்படைக்க வேண்டும். 2023 மார்ச் இறுதிக்குள் திட்டத்தை முடிப்பதற்கு பணிமனை ஒப்பந்ததாரர் திட்டமிட்டுள்ளார். | மேலும் காலதாமதம் மற்றும் மேலதிக் செலவுகளின்றி கட்டுமானத்தை முடிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |